(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 93.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2016 ஆகஸ்ட் 24, புதன்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

440/ ’16

1.

கௌரவ டீ. வீ. சானக,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் வீடமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் ரூபா 250,000/- பெறுமதியான வீடமைப்பு வேலைத் திட்டமொன்று செயற்படுத்தப்பட்டதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகின்ற பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் காணிகள் அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி காணிகள் வழங்கப்படும்போது மாவட்ட காணி பயன்பாட்டுக் குழுவினால் குறிப்பிட்ட காணித் துண்டுகள் அடையாளம் காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவு ரீதியாக தெரிவுசெய்யப்பட்ட நலன்பெறுநர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) மேற்படி நலன்பெறுநர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

(v) நலன்பெறுநர்களை தெரிவுசெய்வதில் பங்கேற்ற அரச உத்தியோகத்தர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(vi) தெரிவுசெய்யப்பட்ட நலன்பெறுநர்கள், காணி உரித்தைப் பெறுவதற்கான உரிய தகைமைகளைக் கொண்டவர்களென திருப்தியடைய முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

446/ ’16

2.

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வனப் பாதுகாப்புத் திணைக்களத்தில், கண்டி மாவட்டத்தில், நாவலப்பிட்டி வீச்சிடைக் காட்டில், சமனலகம பிரதேசத்தில் 7000 பைனஸ் மரங்கள் வெட்டி அகற்றப்பட்டு வருகின்றதென்பதையும்;

(ii) நாவலப்பிட்டி, மாபாகந்தையில் 200 ஏக்கர்களுக்கும், தொலொஸ்பாகே, மல்கொல்லயில் 50 ஏக்கர்களுக்கும் உரிய பைனஸ் மரங்கள் தனியார் வியாபாரிகளின் மூலம் வெட்டி அகற்றப்படுவதற்கு நடவடிக்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) தொலொஸ்பாகே, பரகல பிரிவில் சுமார் 2500 மரங்களை அகற்றுவதற்காக அனுமதி பெறப்பட்டுள்ள போதிலும், தற்போது அனுமதியின்றி சுமார் 12000 மரங்கள் வெட்டி அகற்றப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட சகல மரங்களையும் அகற்றுவதற்காக அனுமதியளிக் கப்படும்போது பின்பற்றப்பட்ட முறையியல்களும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களின் பெயர்களும் யாவையென்பதையும்;

(ii) அதன் மூலம் அரசாங்கத்திற்கு கிடைக்கப்படவேண்டிய பெரும்தொகை பணம் இழக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) மேற்படி மோசடிச் செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக எடுக்கப்படும் சட்ட ரீதியான நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

504/ ’16

3.

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) Lanka Marine Services Ltd. (LMSL) கம்பனியின் சொத்துக்கள் முறைகேடான விதத்தில் விற்பனை செய்யப்பட்டமை தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் SEFR209/2007 ஆம் இலக்கத்தின் கீழ் தொடுக்கப்பட்டுள்ள மனு தொடர்பாக வழங்கப்பட்டுள்ள வழக்குத் தீர்ப்பின் மூலம் எழுப்பப்பட்டுள்ள விடயங்கள் குறித்து புலனாய்வொன்றை ஆரம்பிக்குமாறு 2007.07.21ஆந் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அதன் பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகள் சட்ட ஆலோசனைக்காக 2008.12.08 ஆந் திகதி சட்ட மாஅதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதிலும், இதுவரையில் இது தொடர்பிலான ஆலோசனைகள் கிடைக்கப்பெறவில்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) குறிப்பிட்ட தரவுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

516/ '16

4.

கௌரவ புத்திக பத்திரண,— சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கடற்கரைசார் சுற்றுலாத்துறை வழிகாட்டிகள் எத்தனை பேர் உள்ளனர் என்பதைப் பற்றி தொகை மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், கடற்கரைசார் சுற்றுலாத்துறை வழிகாட்டிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வழிகாட்டிகளை பதிவு செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி வழிகாட்டிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்த தலையிடுவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை அரசாங்கம் பெற்றுத் தருமா என்பதையும்;

(v) கடற்கரைசார்ந்த சுற்றுலாத்துறை வழிகாட்டிகளின் நலன்புரிக்காக மேற்கொள்ளப்படும் வேறு நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

560/ ' 16

5.

கௌரவ எஸ். சிறீதரன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வட்டக்கச்சி பிரதேசத்தில் அரச கமத்தொழில் பண்ணை மற்றும் கமத்தொழில் கல்லூரி ஒன்று அமைந்துள்ளதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்தப் பண்ணையின் மேட்டுநிலம் மற்றும் வயல் நிலத்தின் பரப்பளவு ஏக்கர்களில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) தற்போது அந்தப் பண்ணை எவரால் நிர்வகிக்கப்படுகின்றது; அதனைப் பயன்படுத்துபவர்கள் யாவர் என்பதையும்;

(iv) உரிய திணைக்களத்திற்கு அந்த பண்ணையை ஒப்படைப்பாரா என்பதையும்;

(v) மீண்டும் அதில் தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு அதனை இயங்கச் செய்யும் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) வட்டக்கச்சி கமத்தொழில் பண்ணையுடன் உள்ள கமத்தொழில் கல்லூரியை இயங்க வைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) வவுனியா மற்றும் குண்டசாலையில் உள்ள கமத்தொழில் கல்லூரிகளுக்கு நிகரான வகையில் இது இயங்கியது என்பதையும்;

(iii) மீண்டும் அதே போன்று இயங்கவைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) திணைக்களத்துக்கு ஒப்படைத்து அதனை இயங்கவைப்பதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

602/ '16

6.

கௌரவ லக்கீ ஜயவர்தன,— சுகாதாரம், போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தனியார் மருத்துவ நிறுவனங்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு பாராளுமன்றத்தில் சட்டமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆம் எனின், எத்திகதியில் என்பதையும்;

(iii) மேற்படி சட்டத்திற்கு அமைவாக தனியார் மருத்துவ நிறுவனங்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான முறையியலை நடைமுறைப்படுத்துவாரா என்பதையும்;

(iv) ஆமெனின், அது எவ்விதத்தில் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே (அ)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தின் படி தனியார் மருத்துவ நிறுவனங்கள், தனியார் வைத்தியசாலை பதிவு, ஔடதங்கள் மற்றும் மருத்துவ ஆய்வு கூடங்களை ஒழுங்குமுறைப்படுத்துதல், மருத்துவர்களின் தகைமையை காட்சிப்படுத்தல் ஆகிய செயற்பாடுகள் தற்சமயம் சீராக மேற்கொள்ளப்படுவதில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(ii) மேற்படி சட்டத்தின் கட்டளைகளை உரியவாறு நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

(iii) ஆமெனின், எத்திகதியில்;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

606/ ' 16

7.

கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015 சனவரி தொடக்கம் திசெம்பர் வரை,

(i) அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் கலந்துகொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்களின் எண்ணிக்கை யாது;

(ii) பிரதம அமைச்சரையும் உள்ளடங்கலாக மேற்படி விஜயங்களில் கலந்துகொண்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் யாவர்;

(iii) விஜயம்செய்த நாடுகள் யாவை;

(iv) மேற்படி வெளிநாட்டு விஜயங்களில் கடமை மற்றும் பிரத்தியேக விஜயங்கள் தனித்தனியாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அ (i) இல் குறிப்பிடப்பட்ட விஜயங்களில் அரசாங்க அலுவலர்கள் பங்கேற்றுள்ளனரா;

(ii) ஆமெனில் மேற்படி அலுவலர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி காலப்பகுதிக்குள் அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் கலந்துகொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்களுக்காக செலவாகி உள்ள மொத்தப் பணத்தொகை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

617/ ’16

8.

கௌரவ இ. சார்ள்ஸ் நிர்மலநாதன்,— புத்த சாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள திருக்கேதீஸ்வரக் கோயில் இந்து மக்களின் புனித வழிபாட்டுத்தலமாகும் என்பதையும்;

(ii) திருக்கேதீஸ்வரக் கோயிலுக்கு மிக அண்மையில் அமைந்துள்ள திரு. கணபதிபிள்ளை விஜயகுமாருக்குச் சொந்தமான காணியில் சட்டவிரோதமாக ஒரு பௌத்த விஹாரை நிர்மாணிக்கப்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) சட்டவிரோதமாக நிர்மாணிக்கப்படும் இவ்விஹாரையின் நிர்மாணப் பணிகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

647/ ’16

9.

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யொவுன் புரய 2016 வைபவம் நடத்தப்படுவதன் நோக்கம் யாதென்பதையும்;

(ii) இதன் பிரச்சார நடவடிக்கைகளுக்காக ஏற்கப்படும் செலவினம் எவ்வளவென்பதையும்;

(iii) ஒவ்வொரு விளம்பர நிறுவனத்திற்கும் செலுத்திய தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) யொவுன் புரய 2016 வைபவத்திற்கென செலவிடப்பட்ட மொத்த பணத் தொகை ஒவ்வொரு தலைப்பின் கீழ் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(v) இவ்வைபவத்தை நடத்தியதன் மூலம் அரசாங்கம் எதிர்ப்பார்த்த நோக்கங்கள் நிறைவேறியுள்ளதென திருப்தியடைகின்றாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

669/ ’16

10.

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை துறைமுகத்தை அண்டியதாக திருகோணமலை மாவட்டத்தில் இந்தியாவின் விசேட பொருளாதார அல்லது கைத்தொழில் வலயமொன்றை அமைப்பதற்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு அனுமதியளித்த அமைச்சரவை நிருபம் அல்லது அவதானிப்புகள் அடங்கிய ஆவணங்களைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) மேற்படி இந்தியாவின் விசேட பொருளாதார வலயம் அமைக்கப்படுவதன் அடிப்படை நிபந்தனைகள் மற்றும் முகாமைத்துவம் செய்யப்படும் விதத்தை தெளிபடுத்துவாரா என்பதையும்;

(iv) மேற்படி இந்தியாவின் விசேட பொருளாதார வலயத்திற்கென இனம் காணப்பட்டுள்ள நிலப்பிரதேசத்தின் வரைபடமொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

717/ ’16

11.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில், கெஸ்பேவ நகர சபை ஆளுகைப் பிரதேசத்தில், பிலியந்தல, தம்பே கிராமத்தில் 79 ஏக்கர், 03 ரூட், 21.74 பர்சஸ் விஸ்தீரணத்தைக் கொண்ட 'தம்பே வத்த' எனும் தென்னைத் தோட்டத்தை துண்டாடுவதற்காக தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குத் தோட்டங்களை நிருவகிக்கும் மற்றும் துண்டாடும் நிருவாக சபைக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி காணியை துண்டாடும் பட்சத்தில், தெங்குப் பயிர்ச் செய்கைக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் என்றும், நாட்டின் தென்னை விளைச்சலுக்கு பாதிப்பு ஏற்படும் என்றும், எனவே குறித்த காணியை துண்டாடுவதற்கு சிபாரிசு செய்வதில்லை எனக் குறிப்பிட்டு, தெங்குப் பயிர்ச் செய்கை சபை, களுத்துறை பிராந்திய அலுவலகத்தின் பிராந்திய முகாமையாளரினால், தெங்குப் பயிர்ச் செய்கைச் சபையின் தவிசாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) பொருளாதாரத்துக்கும், சுற்றாடலுக்கும் ஏற்படுகின்ற பாதிப்பு தொடர்பாக கவனம் செலுத்தி காணியைத் துண்டாடுவதற்கு எதிராக மக்களின் எதிர்ப்பு எழுந்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி அறிக்கைகளை பொருட்படுத்தாது காணியை துண்டாடுவதற்கு சிபாரிசு செய்ய நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) இன்றேல், இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

520/ ’16

12.

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையில் பால்மாற்று சிகிச்சைகளை மேற்கொள்ளும் ஒரு போக்கு காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) அதன் மூலம் சிக்கல் நிலைமைகள் எழுகின்றனவா என்பதையும்;

(iii) இது தொடர்பாக அரசாங்கம் போதியளவு கவனம் செலுத்தியுள்ளதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் பால்மாற்று சிகிச்சைகளை மேற்கொண்டவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அரசாங்க மருத்துவமனைகளில் இச்செயன்முறைக்கான சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(iii) ஆமெனில், கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் அரசாங்க மருத்துவமனை களில் மேற்கொள்ளப்பட்ட பால்மாற்று சத்திர சிகிச்சைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) அதன் பொருட்டு அரசாங்கம் ஏற்றுள்ள செலவினம் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) பால்மாற்று சிகிச்சையை மேற்கொண்டுள்ள ஆட்களின் ஆளடையாளம் தொடர்பாக தேசிய அடையாள அட்டையிலும் பிறப்புச் சான்றிதழிலும் மாற்றங்கள் செய்யப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அச்செயன்முறை எவ்வாறு மேற்கொள்ளப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) பால்மாற்று சிகிச்சையை மேற்கொண்டுள்ளவர்களுக்கு மத்தியில் HIV தொற்றுக்குள்ளானவர்கள் இருப்பதாக தெரியவந்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வெண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) HIV உள்ளிட்ட மேக நோய்கள் இந்த ஆட்களுக்கு மத்தியில் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

604/ ' 16

13.

கௌரவ லக்கீ ஜயவர்த்தன,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1980 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க ஒப்பனைச் சாதனங்கள், உபகரணங்கள் மற்றும் மருந்துகள் சட்டத்தின் கீழ் இலங்கைக்கு ஒப்பனைச் சாதனங்களை இறக்குமதி செய்யும் போது அதற்கு ஒப்பனைச் சாதனங்கள், உபகரணங்கள் மற்றும் மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) எனினும், 2015 இல் தாபிக்கப்பட்ட மருந்துகள் ஒழுங்குமுறையாக்கல் அதிகாரசபைச் சட்டத்தின் மூலம் ஒப்பனைச் சாதனங்கள் எனும் விடயம் நீக்கப்பட்டுள்ளதனால் உடலுக்கு கேடுவிளைவிக்கின்ற பாதகமான ஒப்பனைச் சாதனங்களை இறக்குமதி செய்வதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது என்பதையும்;

(ii) உடலுக்கு பாதகமான மேற்படி ஒப்பனைச் சாதனங்களை பயன்படுத்துவோர் பல்வேறு ஒவ்வாமைகளுக்கு ஆளாகி மரணமடைந்தும் மற்றும் நோய்வாய்ப்பட்டும் உள்ளார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) இவ்வாறான சம்பவங்களைக் குறைப்பதற்கும், ஒப்பனைச் சாதனங்களின் இறக்குமதியை ஒழுங்குமுறைப்படுத்துவதற்குமென முறைசார்ந்த முறையியல் ஒன்றை துரிதமாக தயாரிப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

670/ '16

14.

கௌரவ பிமல் ரத்னாயக்க,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்திய அரசாங்கத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையே சாம்பூர் மின் உற்பத்தி நிலையம் நிர்மாணிப்பதற்கென யாதேனுமொரு உடன்படிக்கை, இணக்கப்பாட்டு ஆவணமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆவணத்தை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) அதற்கென வழங்கப்பட்ட அமைச்சரவை அனுமதி அல்லது சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் அவதானிப்புகளுடன் கூடிய ஆவணங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) சாம்பூர் மின் உற்பத்தி நிலைய பராமரிப்பு நடவடிக்கைக்காக இந்திய-இலங்கை ஒருங்கிணைந்த கம்பனியொன்று தாபிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி கம்பனியின் சொத்துக்கள் மற்றும் முகாமைத்துவத்துக்கு ஏற்புடைய இணக்கப்பாடுகள் மற்றும் நிபந்தனைகள் யாவை என்பதையும்;

(vi) சாம்பூர் மின் உற்பத்தி நிலையத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ள காணியின் அளவு எவ்வளவென்பதையும்;

(vii) மேற்படி காணியின் வரைபடமொன்றை (plan) சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

706/ ' 16

15.

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 சனவரி 08 ஆம் திகதி முதல் இதுவரை நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்களின் எண்ணிக்கை யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு விஜயமும்,

(i) மேற்கொள்ளப்பட்ட காலஎல்லை;

(ii) நோக்கங்கள்;

(iii) செலவிடப்பட்ட பணத் தொகை;

(iv) நாட்டுக்குக் கிடைத்த பயன்கள்;

தனித்தனியே யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

நிதி அமைச்சர்,— துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தம்),— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2016 சனவரி 20 ஆம் திகதிய 1950/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2016 சனவரி 28 ஆம் திகதிய 1951/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2016 பெப்ரவரி 29 ஆம் திகதிய 1956/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2016 மார்ச் 08 ஆம் திகதிய 1957/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 5),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2016 ஏப்பிறல் 01 ஆம் திகதிய 1960/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 6),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2016 மே 12 ஆம் திகதிய 1966/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 7),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2016 மே 20 ஆம் திகதிய 1967/57 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 8),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2016 யூன் 16 ஆம் திகதிய 1971/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

நிதி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வைக் கட்டணங்கள் தொடர்பில் 2016 யூன் 16 ஆம் திகதிய 1971/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2016 ஏப்பிறல் 29 ஆந் திகதிய 1964/70 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 இ பிரிவின் கீழான உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2016 மே 02 ஆந் திகதிய 1965/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 இ பிரிவின் கீழான உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2016 மே 16 ஆந் திகதிய 1967/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.4),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2016 மே 19 ஆந் திகதிய 1967/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

இறப்புக்களின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 15.

ஒதுக்கீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 16.

சட்ட ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 17.

பிரதேச அபிவிருத்தி அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவீனத் தலைப்பு 147, நிகழ்ச்சித்திட்டம் 01,— † செயற்பாட்டு நடவடிக்கைகள் 2016 ஜனவரி 01 ஆம் திகதியுடன் ஆரம்பித்து 2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் நிதி ஆண்டின் பயன்பாட்டுக்காக இலங்கையின் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் ஏற்கனவே அங்கீகரித்துள்ள செலவின எல்லைகளை விஞ்சாத வகையில் அதன் பலதரப்பட்ட செலவீன தலைப்புக்களின் கீழ் எதிர்பார்த்த சேமிப்புக்களை தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தின் செலவீனத் தலைப்பு "வரவுசெலவுத்திட்ட ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் அவசர நிலைமைகள் செயற்திட்டத்திற்கு" மாற்றிக் கொள்வதற்கும் 2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க வரவுசெலவுதிட்ட வகுத்திட்டுச் சட்டத்தின் 6.1 மற்றும் 6.2 ஆம் பிரிவுகளினால் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்டு இனங்காணப்பட்ட வெளிநாட்டு நிதியளிப்புடன் செயற்படுகின்ற அபிவிருத்தி செயற்திட்டங்களை துரிதப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கி குறைநிரப்பு நிதி ஏற்பாடாக உரிய அமைச்சுக்களுக்கு மாற்றுவதற்கு இயலும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசுக்குச் சொந்தமான வேறு ஏதேனுமொரு நிதியத்திலிருந்து இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் விருப்பின் பிரகாரம், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தினால் நிதியளிப்பு செய்யப்பட்ட ரூபா ஐம்பத்தொன்பது கோடி இருபத்தொன்பது இலட்சத்து இருபத்து ஐந்து ஆயிரங்கள் (ரூ. 592,925,000) தொகையினை விஞ்சாத தொகையொன்றை அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டுமென பிரதேச அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்துள்ளார்.

<u>**அட்டவணை**</u>

தலைப்பு:- 147 - பிரதேச அபிவிருத்தி அமைச்சு

நிகழ்ச்சித்திட்டம்:- 1 - செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்

| | | |
|---|---|---|
| மீண்டெழும் செலவீனம் | - | ரூ. 469,425,000 |
| மூலதனச் செலவீனம் | - | ரூ. 123,500,000 |
| மொத்தச் செலவீனம் | - | ரூ. 592,925,000 |

(ரூபா ஐம்பத்தொன்பது கோடி இருபத்தொன்பது இலட்சத்து இருபத்து ஐந்து ஆயிரங்கள் மாத்திரம்)

**அரச அலுவலர்களுக்கான முற்பண "பீ" கணக்கு**

| | |
|---|---|
| உச்ச செலவீன எல்லை ( உச்ச வரவு எல்லை) | – ரூ 2,000,000 |
| குறைந்த கிடைப்பனவு எல்லை (குறைந்த செலவு எல்லை) | - ரூ. 150,000 |
| உச்ச வரவு நிலுவை எல்லை | - ரூ. 3,500,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2016 ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. 1 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 55,000,000

* 18.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 19.

பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 20.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை மறுசீரமைத்தல்,— 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுச் சட்டத்தின் 16 (1) ஆவது உறுப்புரையின் பிரகாரம், ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் அலுவல்களை நிறைவேற்றுவதற்கு அந்த ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக பணிப்பாளர் நாயகம் ஒருவரை நியமிப்பதற்கும், அப்பதவியை வகிப்பவருக்கு பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் சம்பளத்தைச் செலுத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாலும்;

ஆபத்தை ஏற்க வேண்டிய பதவியான இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு 2015.02.12 ஆம் திகதி அரசாங்கத்தின் தேவையின் அடிப்படையில் சட்ட மா அதிபர் திணைக்களத்தில் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் பதவியை வகித்த சனாதிபதி சட்டத்தரணி திருமதி ஏ.ஏ.பீ. தில்ருக்ஷி டயஸ் விக்ரமசிங்கவை நியமனம் செய்ததன் அடிப்படையில், அவருக்கு தனிப்பட்ட வகையில் அமையுமாறு கீழ் குறிப்பிடப்படும் சம்பளம் மற்றும் படிகளை 2015.02.12 ஆம் திகதி முதல் செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாலும்;

அ. மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் பதவிக்குரித்தான மாதாந்தச் சம்பளம் மற்றும் சகல கொடுப்பனவுகள் (தொலைபேசி கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் வீட்டு வாடகைக் கொடுப்பனவு தவிர்ந்த); அத்துடன்

ஆ. இலஞ்சம் அல்லது ஊழல் குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திற்குரித்தான அமைச்சின் செயலாளருக்கான கொடுப்பனவு, தொலைபேசிக் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் அரசாங்கத்தினால் உத்தியோகபூர்வ இல்லமொன்று வழங்கப்படவில்லையாயின் வீட்டு வாடகைக் கொடுப்பனவு.

அதற்கமைவாக, 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுச் சட்டத்தின் 16 (2) ஆவது உறுப்புரையின் பிரகாரம், இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், சனாதிபதி சட்டத்தரணி திருமதி ஏ.ஏ.பீ. தில்ருக்ஷி டயஸ் விக்ரமசிங்கவிற்கு அரச திரட்டு நிதியத்திலிருந்து மேற்குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்த வேண்டுமெனும் பிரேரணை இப்பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 21.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2016 யூன் 22 ஆந் திகதிய 1972/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப்பத்திரிகை மூலம் சிங்கள மற்றும் தமிழ்மொழி பிரதிகளில் அச்சுப் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட, மோட்டார் வாகனச் சட்டத்தின் (203 ஆவது அத்தியாயமான) 122 ஆம் பிரிவு மற்றும் VII அ பகுதியுடன் சேர்த்து வாசிக்கப்படும், குறித்த சட்டத்தின் 237 ஆவது பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் சிவில் விமானச்சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 நவெம்பர் 02 ஆம் திகதிய 1939/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.07.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் இணைக்கப்பட்டுள்ளது)

* 22.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படும் ஊதியங்கள் மற்றும் ஏனைய படிகள்,— பத்தொன்பதாவது அரசியல் யாப்புத் திருத்தத்தின் ஊடாக திருத்தப்பட்டவாறான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 41 (ஆ) உறுப்புரையின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்பது சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படும் ஊதியங்கள் மற்றும் எனைய கொடுப்பனவுகளை, குறிப்பிட்ட ஆணைக் குழுக்கள் உண்மையிலேயே அலுவல்களை ஆரம்பித்த திகதியினை மேற்குறிப்பிடப்பட்ட செலுத்துகைகள் அமுலாக்கப்படும் திகதியாகக் கருதி செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாலும்:-

(அ) பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் தலைவர்கள் தவிர ஏனைய தலைவர்களுக்கு ரூபா. 100,000/- மாதாந்தக் கொடுப்பனவவையும், ரூபா.10,000/- மாதாந்தத் தொலைபேசிக் கட்டணத்தையும், தனிப்பட்ட பாவனைக்கு உரித்துடைய வகையில் உத்தியோகபூர்வ வாகனமொன்று மற்றும் வாகனத்திற்காக 225 லீட்டர் எரிபொருள் அல்லது சந்தை விலையின் அடிப்படையில் அதற்கு இணையான கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும்;

(ஆ) பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் சுயாதீன ஆணைக்குழுத் தலைவர்களுக்கு தமது நிரந்தரப் பதவிக்குரிய சம்பளம் மற்றும் படிகளுக்கு மேலதிகமாக, சுயாதீன ஆணைக்குழுத் தலைவர் ஒருவரின் மாதாந்தக் கொடுப்பனவின் 50% ஐ மாதாந்தக் கொடுப்பனவாகச் செலுத்துவதற்காகவும்;

(இ) இலஞ்சம் அல்லது ஊழல் குற்றப் புலனாய்வு ஆணைக்குழு தவிர ஏனைய சுயாதீன ஆணைக்குழுக்களுக்குப் பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படாத உறுப்பினர்களுக்கு ரூபா 75,000/- மாதாந்தக் கொடுப்பனவையும், ரூபா 8,000/- மாதாந்தத் தொலைபேசிக் கட்டணத்தையும், தான் வசிக்கும் இடத்திலிருந்து ஆணைக்குழு அலுவலகத்திற்குச் செல்வதற்கான தூரத்தின் அடிப்படையில் 350 கிலோ மீட்டர்கள் வரை ரூபா 25,000/- போக்குவரத்துக் கொடுப்பனவு அல்லது 350 கிலோ மீட்டர்களிலும் அதிகளவு தூரத்திற்கு ரூபா 50,000/- போக்குவரத்துக் கொடுப்பனவையும் செலுத்துவதற்காகவும்;

(ஈ) 2015.06.17 ஆம் திகதிய 3/2015 ஆம் இலக்க அரசாங்க வர்த்தக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவருக்கு ஒரு கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ரூபா 10,000/- கொடுப்பனவைச் செலுத்துவதற்காகவும்;

(உ) 1994 இன் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் குற்றப் புலனாய்வு ஆணைக்குழுச் சட்டத்தின் (8) ஆம் உறுப்புரைக்கமைய அந்த ஆணைக்குழுவின் தலைவருக்கு இணையான வகையில் உறுப்பினர்களுக்கும் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளதனால் அந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு ரூபா 95,000/- மாதாந்தக் கொடுப்பனவையும், ரூபா 8,000/- மாதாந்தத் தொலைபேசிக் கட்டணத்தையும், தனிப்பட்ட பாவனைக்கும் உரித்துடைய வகையில் உத்தியோகபூர்வ வாகனமொன்று மற்றும் வாகனத்திற்காக 170 லீட்டர் எரிபொருள் அல்லது சந்தை விலையின் அடிப்படையில் அதற்கு இணையான கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும்;

(ஊ) தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு தேர்தல் ஒன்றுக்கான அறிவித்தல் விடுக்கப்பட்ட திகதி முதல் பெறுபேறுகள் வெளியிடப்படும் திகதி வரையிலான காலப் பகுதிக்காக அவர்களது மாதாந்தக் கொடுப்பனவின் ¾ விசேட கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும்; மற்றும்

அதற்கமைய, அரசியல் யாப்பின் 41 (அ) சட்டத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்பது சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் ஊதியங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்தவேண்டுமெனும் பிரேரணை இப்பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் இணைக்கப்பட்டுள்ளது)

* 23.

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்,— கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறாக, 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் (அத்தியாயம் 131) 39 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டதும் 2016.07.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 24.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— "இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 25.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் கட்டளைகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 213 ஈ பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய அச் சட்டத்தின் 237 ஆவது பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 திசெம்பர் 22 ஆந் திகதிய 1946/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டதும் 2016.03.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 26.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 27.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 28.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.